296

பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

MADRAS

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம்; கர, தை; 18—1—52. தளிர்-16

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அழிவும் ஆக்கமும்

'மழை இன்றி மாநிலத்தார்க் கில்லை' என்னும் பழமொழி அனைத்துலகத்திற்கும் பொருந்துவதாகும். நிலவளத்தை மிகுத்து விளைவினைப் பெருக்கி, உயிரினங்களின் பசிக் கொடுமையைப் போக்கிக் காக்க மழை உதவுவது யாவரும் அறிந்த செயலாகும்.

ஆயினார், அம் மழை சிலகாலங்களில் மிகுதியாக, அளவுக்கு அதிமாகப் பெய்து விளைவு வளங்களை ஒருங்கே நாசமாக்குதலைக் காண்கிறோம். 'நீர் மிகிற் சிறையும் இல்லை' என்றபடி மக்கள் ஆற்றலைக் கொண்டு தடைசெய்ய இயலாத வெள்ளப் பெருக்கினால் நாட்டினை நாசம் செய்யும் மழையின ஆற்றலை நாம் உணர்ந்திருக்கிறோம். மழை தக்க பருவங்களில் பெய்யாமலும், எதிர் பாராத, வேண்டாத காலங்களிற் பெய்தும் பயிர்களை அழிப்பதையும், அறவே பெய்யாது பொய்த்து நின்று நாட்டில் ஏக்கம் மிகுமாறு செய்தலையும் ஓரோவொரு காலங்களில் காண்கிறோம்.

இத்தகைய அழிவு வேலைகளைச் செய்யும் மழை, பின்னும் தானாகவே கருணையோடு தக்க காலங்களில் பொருத்தமாகவும் அளவாகவும் பெய்து நாடு, மக்கள், பிற உயிர்கள், பயிர் பச்சைகள் வளங்கொண்டு தழைக்குமாறு அருட்செயல் மிகுதலையும் காண்கிறோம்.

ஊழி முடிவில் அனைத்துலகையும் தன்னுள் அடங்கிக் காக்குமாறு செய்து, மீண்டும் அவைகளைப் படைத்துக் காத்தளிக்கும் ஆண்டவன் திருவருட் செயலையே மழையும் பின் பற்றுவதாகத் தெரிகின்றது.

ஆகவே மழை ஆண்டவனை ஒப்ப, 'எல்லாம் வல்லது' என்பதனை இத் திருக்குறள் விளக்குகின்றது.

---

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

கெடுப்பதூஉம்—பூமியின் கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்; கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம்—அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற் போல எடுப்பதூஉம்; எல்லாம்மழை—இவை எல்லாம் வல்லது மழை.

மழை, கெடுத்தல் எடுத்தல்களைச் செய்யும் என்பது கருத்து. கெடுத்தல் இன்னதென உணர்வார்க்கே ஆக்கத்தின் அருமை தெற்றெனப் புலப்படும் என்னும் கருத்தால் கெடுப்பதூஉம், என்று முதற்கண் ஓதப்பட்டது. வெயிலின் கொடுமை அறிந்தார்க்கே நிழல் அருமை தெரியும் என்பர்.

அளபெடைகள், இன்னோசை பயப்பதோடு மழையின ஆற்றலை உறுதிப்படுத்துங் கருத்தில் வந்தன.

அம் மழையால் ஏற்படும் அழிவும் ஆக்கமும் பலவாக இருத்தலை நோக்கி 'எல்லாம்' என்று கூறினார்.

---

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | | 0 1 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

| கிளை | கர, தை, | தளிர் |
|---|---|---|
| 4 | 18-1-52 வெள்ளி | 16 |

## போற்றுதும் !

மொழி, கலை, தொழில், அருள், பணி என்னும் ஐவகைத் திறமைகளிலும் நாட்டு மக்கள் விளங்கவேண்டும்! இது குருகுல இயக்கத்தின் நோக்கம். இதற்காகவே, வெளியில் பன்னிரண்டு வகையான பணித்திட்டங்களையும் அமைப்பிடத்தில் திருக்குறட் செய்கைகளையும் குருகுலம் மேற்கொண்டிருக்கிறது. பணித்திட்டங்களிலும் செய்கைகளிலும் ஈடுபடுவோர், இந்த ஐவகைத் திறங்களிலும் மேம்படுவது உறுதி!

குருகுலத்தில் ஈடுபட்டாலும் படாவிட்டாலும் இத் திறமைகளில் இயல்பாகவோ வேறு அமைப்புகளின் தொடர்பினாலோ சிறந்து நிற்பார் எவராலும் அவர்களைக் குருகுலம் போற்றும்:

சென்னை மாணவர் மன்றம் என்பது, சென்னை மாநில மாணவர் மன்றமாய்ப் பணிபுரிந்து திகழ்கின்றது. அதன் தலைவர் திரு. டாக்டர் தருமாம்பாள் அம்மையார். அதனை நிறுவியவர் திரு. புலவர் மயிலை சிவமுத்துக்குமாரசாமி முதலியார்.

ஒரு நிறுவனத்தை நன்கு நடத்தும் அரிய இவ் விருபெருந் தமிழ்த் தொண்டர்க்கும் அண்மையில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் இனிய தலைமையில் மணிவிழாக் கொண்டாடப் பெற்றது, தமிழகத்தின் பெருமைக் குரிய நிகழ்ச்சி! விழாப் பொறுப்பினர் தமிழகத்தின் பாராட்டுதலுக்குரியவர்.

திரு. அம்மையார், தமிழ் மொழியும், மருத்துவக் கலையும், அதன் தொழிலும், சித்தாந்த அருள் நெறியும், மாணவர் மன்றப்பணியும் அறிந்து செய்பவர்.

புலவர் மயிலை சிவமுத்து அவர்கள், தமிழ் ஆங்கில மொழிகளில் ஆற்றல் அமைந்து, ஓவியம் இசை, கோள்நூல் கவிதை முதலிய கலைகளில் வல்லமை வாய்ந்து, உயர்ந்த ஆசிரியத் தொழிலில் மிக்க தேர்ச்சி பெற்று, பழமையும் பொதுமையும் பேணும் திருநெறியாகிய வேதாந்த சித்தாந்த சிவநெறிச் சமயத்தில் உள்ளம் எய்தி மாணவர் திறம் வளர்க்கும் மன்றம், தமிழாசிரியர் நிலை உயர்த்துங் கழகம், தமிழர் இயக்கம் முதலிய பற்பல நற்பணிகளையும் தளராமல் நடத்துதல் மேற்கொண்டு உழைப்பின் உருவமாய் விளங்குகின்றார்கள்.

ஆகவே, அவர்களைக் குருகுலம் தன் கொள்கை யுருவுக்கு ஓர் எடுத்துக் காட்டாக எண்ணி மதித்துப் போற்றுகின்றது. அத்தகையோர் மணிவிழாவுக்குக் குருகுலம் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவிக்கின்றது. வாழி மணிவிழாத் திருவினர்!

---

## 'முல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51– லிருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் கிளை) தொடங்கி நடந்துவருகிறது

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாதிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

# * மணிவிழா நிகழ்ச்சிகள் *


சென்னை கோகலே மண்டபத்தில் 5-1-52 சனிக்கிழமை காலை 10½ மணிக்குப் புலவர். மயிலை. சிவ. முத்து அவர்கட்கும், டாக்டர் எஸ் தருமாம்பாள் அவர்கட்கும் சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில் 60-ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா, மணி விழாக் கொண்ட தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. வ. பா. தாமரைக் கண்ணி அம்மையார், திரு. வடிவாம்பாள், M. S. வெங்கடாச் சாரியார், அருட்பெருஞ்சோதி. இராச மாணிக்கம் பிள்ளை, தேவாரம். மயிலைவேதாசல முதலியார் ஆகியவர்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களுக்குப் பின் நிகழ்ச்சி தொடங்கியது.

வரவேற்புரை :

சித்தாந்தப் பேராசிரியர் பாரிப். கண்ணைப்ப முதலியார் அவர்கள வரவேற்புரையில் தமிழின் தன்மையையும் 4000–5000 ஆண்டுகட்கு முன்னரே அது பெற்றிருந்த இலக்கண இலக்கியச் சிறப்புக்களையும் தமிழரின் கடல் கடந்த புகழ், தொடர்புகளையும் தமக்கே உரிய உயரிய செந்தமிழ் நடையில் சுருக்கமாகக் கூறி, இடைக்காலத்தில் தமிழுக்கும் தமிழர்க்கும் ஏற்பட்ட இழிநிலையினையும், இன்று ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியையும் சுட்டிக்காட்டி, இன்றைய விழிப்புகட்கு வித்திட்டவர் ஆசிரியர் மறைமலை அடிகளாரே என்பதையும் குறிப்பிட்டார்.

அடிகளின் முதல் மாணவர் புலவர் மணி. திருநாவுக்கரசர் பால் தாமும் மணிவிழாத் தலைவர்



திரு. டாக்டர் தருமாம்பாள் அம்மையார்.

புலவர் மயிலை. சிவமுத்து அவர்களும் ஒரு சாலை மாணவராக இருந்து தமிழ் பயின்றதையும், ஓவியக் கல்லூரியில் ஓவியம் பயின்றதையும் பாலசைவ சபையில் வாரந்தோறும் சொற்பொழிவுகள் செய்தும் செய்வித்தும் வேறுபல வகைகளில் தொண்டாற்றி வந்ததையும் அந்நாட்களில் சிவமுத்து அவர்கள் இசையோடு தேவாரம் பாடுவார்கள் என்றும் சொன்னார்கள். பின், அவர்கள் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் நடத்திய சைவப் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்து புதிய முறைகளில் ஆர்வமுண்டாகும் படி கதை, ஓவியங்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பாடம் சொல்லியும், தங்கள் ஆசிரியர் மணியரசர் அமைத்த தமிழ்ச் சங்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றியும், வந்தார்கள் என்றும், 20 ஆண்டுகளுக்குமுன் மாணவர் மன்றம் கண்டு, அதைத் திறம்படக் குமரிமுதல் வேங்கடம் வரையுள்ள தமிழ் மாணவர்கள் 25,000. பேர் அதில் ஈடுபட்டுப் பாட்டு, உரை, கட்டுரை, நடிப்புத்திறங்களை வளர்த்துக் கொண்டு பரிசு பெறுமாறு அதை வளர்த்திருக்கிறார்கள் என்றும் கூறி அவர்களின் தமிழ்ச்சைவத் தொண்டுகளையும், சீர்திருத்தப் பண்புகளையும் எடுத்துக் காட்டினார்கள்.

மேலும், எடுத்த செயலை எத்துணை இன்னல் சூழினும் சோராமல் செய்து முடிக்கும் திறன் சிவமுத்து அவர்களுக்கு உண்டென்றும், ஆசிரியர் தொண்டில் பன்னாள் பழகிய அவர்கள் எத்தகைய மாணவர்களும் கல்வியில் ஊக்கங்கொள்ளுமாறு நயமாகப் பேசுவார்கள் என்றும், நண்பர்களுக்கும் பிறக்கும் நேரும் துன்பங்களை எண்ணி அவைகளைப் போக்க முயல்வார்கள் என்றும், மற்றும் அவர்களின் நேர்மையான, கண்டிப்புள்ள தன்மை, தமிழாசிரியர் நிலையை உயர்த்தி அவர் ஆற்றிய பணிகள், தாய்மொழியே 100க்குத் 90பேர் படிக்காத நிலையில் வேற்று மொழியைக் கட்டாய பாட மாக்கக் கூடாது என்று 1938-39ல் அவர் உயிர்ப்பாக இருந்து நடத்திய வரலாறு கண்டறியாத மொழிப் போர், இன்னும் அவர் தமிழ் மொழிக்காகவும் தமிழர் உயர்வுக்காகவும் இராப்பகலாக ஓய்வில்லாமல் உழைத்துவரும் சிறப்பு, என்பவைகளைப் பற்றி எல்லாம் விளக்கமாகப் பேசினார்கள்.

டாக்டர் திரு. தருமாம்பாள் அவர்கள் உடல்நோய் மருத்துவராக இருந்து மக்களுக்கு நலம் செய்வதோடு, அவர்களின் உளநோய் அறிந்து வேலையில்லார்க்கு வேலை தேடித் தந்தும், கல்வி வேண்டுவார்க்குக் கல்வி தந்தும், திக்கற்றோர்களைக் காப்பாற்றியும் உதவி செய்துவரும் சிறப்பை எடுத்துச் சொல்லித் தமிழுக்காக அவர்கள் கட்டாய இந்தியை எதிர்த்துச் சிறை சென்றதையும், தமிழ் மாதர்கள் முன்னேற்றத்துக்காக அந்த நாட்களில் எவரும் முன் வந்து பணி செய்யாத போது வீரத்தோடு முன் வந்து பணி செய்ததையும், மாணவர் மன்றத்தின் தலைவராக இருந்து அதைச் சிவமுத்து அவர்கள் விருப்பப்படி சிறப்பாக நடத்தி வருவதையும் பாராட்டினார்கள்.

இவ்விரு தொண்டர்கட்கும் புலனழுக்கற்ற அந்தணாளர், திரு. வி. க. அவர்கள் தலைமையில் விழா நடப்பது சிறப்பு என்றும் குறிப்பிட்டார்கள்.

பின் மன்றத்தார், தலைவர் அவர்கட்கு ஓர் அரிய வரவேற்பிதழ் படித்துக் கொடுத்தார்கள்.

தலைமையுரை :

பெரியார் திரு. வி. க. அவர்கள், கோகலே மண்டபத்தை அமைத்தவர் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார் என்றும், தாம் அவரால் பொதுப் பணிகளில் ஈடுபடவும் பேசவும் ஊக்கம் பெற்றவர் என்றும், தாய்மொழியினால்தான் மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப முடியும் என்று அவர் சொல்லுவார் என்றும், தாய்மொழிக் கழகத் தொண்டாற்றும் தக்கோர் இருவர்க்கு இங்கே மணிவிழா நடை

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்



யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

பெறுவது சிறப்பே என்றும் எடுத்துக் காட்டினார்.

சுவிட்சர்லண்டிலிருந்து ஓர் அம்மையார் இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் தம்மிடம் வந்தபோது உங்கள் நாட்டில் பெரும்பாலும் ஒரே மாதிரியான கொள்கைகள் அங்கங்கே வெவ்வேறு சமயப் பேரால் வழங்குகின்றனவே; அவற்றிற்கெல்லாம் ஒரே பெயர் கிடையாதா? என்று கேட்டதாகவும், அதற்கு விடையாக, "உண்டு–அறம் (தருமம்) என்பதே அது" என்று தாம் சொன்னதாகவும் தம் பேச்சுக்கிடையே தலைவர் குறிப்பிட்டார்.

அத்தகைய தருமத்தில் தம் பெயருக்கேற்ப டாக்டர். தருமாம்பாள் சிறந்திருப்பது பற்றியும், அவர்கள் எவ்வளவு சீர்திருத்தம் பேசினாலும் யாரிடம் பழகினாலும் நாடோறும் திருவாசகப் பாடல்களை மனமுருகிப் பாடி இறை வழிபாடு செய்வது பற்றியும் பாராட்டி–வாழ்த்தினார்.

பின் "சிவமுத்து அவர்களின்பேச்சு, மூச்சு, உடம்பு எல்லாம் தமிழ்; தமிழாகவே வாழ்பவர் அவர்; விளம்பரம் கருதாமல் தொண்டாற்றுவார்; அவர் வாழ்வில் சிறந்த ஒன்று இது. விளம்பரம் வேண்டாத தொண்டு தெய்வத்தொண்டு, என்பது என் எண்ணம். வரவேற்புரையில் அவர் தொண்டுகளும், உயர் குணங்களும் சொல்லப் பெற்றன. அவை எல்லாம் உண்மை என்பதைநான் அறிவேன். பலரும் அறிவர்" என்று கூறி வாழ்த்தினார்.



திரு. மயிலை சிவ முத்துக்குமாரசாமி முதலியார்.

தலைவர், இறுதியாக 'மணிவிழா'க் கொண்டாடும் வழக்கம் உலகமுழுதும் இருக்கிறது என்றும், அதன் கருத்து 60 ஆண்டு வரை தமக்காகவும் தம் குடும்பத்தார்க்குமாகவே வாழ்ந்து இயன்றவரை இடையிடையே பொதுத் தொண்டும் செய்த நிலையிலிருந்து பொதுத் தொண்டுக்காகவே வாழ வேண்டும் என்பதை நினைப்பூட்டுவதே என்றும், இன்று மணிவிழாக் கொள்ளும் தக்கோர் நெடு நாளாகவே தம் வாழ்வைப் பொதுத் தொண்டுக்குச் செலவிட்டு வருகிறார்கள் என்றும், தமிழ் அவர்களை அப்படி செய்து விட்டது என்றும், தமிழ்ப் பண்பாடு அப்படிப் பட்

டது என்றும், தமிழை அதன் பண்டைப் பண்பாட்டுக் கேற்ப வளர்க்கவேண்டும் என்றும், இனிமை மிக்க தமிழ் இன்று மூர்க்கத்தமிழாக வளர்ந்து வருகிறது என்றும், சிலப்பதிகாரம் ஓர் ஒப்பற்ற காவியம் என்றும், உள்ளத்தை உருக்கும் பண்பு அதில் இருக்கிறது என்றும், அதன் சிறப்புக்களை மறைமலை அடிகளார் தமக்கு விளக்கினர் என்றும், பிரெஞ்சு தேசத்தில் நடைபெற்ற ‘கவிதை எது’ என்னும் ஆராய்ச்சி ஒன்றில் ‘உள்ளத்தை உருக்குவதே’ கவிதை காவியம் என்று முடிவு செய்தார்கள் என்றும், தமிழ் அந்நெறியில் வளர்க்கப்படுதல் வேண்டுமென்றும், உடலுக்கு வெறியூட்டுகிற தமிழ் வேண்டாம் என்றும் எல்லாம் குறிப்பிட்டார்கள்.

வாழ்த்துக்கள்:

பின்னர், மாணவர் மன்றத்தின் சார்பிலும், சென்னைச் சிவனடியார் திருக் கூட்டம், சைதைத் திருவள்ளுவர் செந்தமிழ்க் கழகம், தாய்மார் கழகம், கோவைக் கடுத்த சௌரிபாளையம் முதியோர் இரவுப் பாடசாலை இவற்றின் சார்பிலும், ஔவைப் பதிப்பக ஆசிரியர் ஐ. நடேசன், நக்கீரக்கழகச் செயலாளர் சிறுவை. நச்சினர்க்கினியன், புலவர் அவர்களின் உறவினர் ஆகியவர்களின் சார்பில் மணிவிழாத்தலைவர் இருவருக்கும் வாழ்த்துக்கள் படித்துக் கொடுக்கப் பெற்றன.

மணிவிழாக் கொள்வார்க்குப் பல்வேறு தமிழ், சமய, கலை, சீர்திருத்த, பணி அமைப்புகளின் சார்பில் மலர் மாலைகள் அணியப் பெற்றன சிலரால் புத்தாடைகளும் (புலவாவர்கட்கு) போர்த்தப் பட்டன. சிவனடியார் திருக் கூட்டச் செயலாளர் திரு. M. R. சம்பந்தம் அவர்கள் விலை உயர்ந்த காஷ்மீர் சால்வை ஒன்றைப் போர்த்தினர்கள்.

தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட வாழ்த்துச் செய்திகளும், பாராட்டுரைகளும் அனுப்பியோர் பெயருடன் சுருக்கமாகப் படிக்கப்பெற்றன.

படப்பரிசு:

தமிழ்ப்பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களின் இளவல். திரு. கா. மாணிக்க முதலியார் அவர்கள் தாம் எழுதுவித்த மணிவிழாத் தலைவர்களின் பெரிய அளவு திருவுருவப் படங்களை அவர்களுக்குப் பரிசாக அளித்தார்கள்.

வேண்டுகோள்:

திரு. சிறுவை மோகனசுந்தரம் அவர்கள், புலவர், சிவமுத்து அவர்களின் அயராத் தொண்டுகளையும், அவர்களின் குடும்ப நிலையினையும் தமிழ் மக்கள் கடமைகளையும் சுட்டிக்காட்டி அவர்கட்கு அடுத்த ஆண்டுக்குள் 10,000 வெண் பொற் காசுகளேனும் சேர்த்து ஒரு பண முடிப்புத் தர வேண்டும் என்றும், அவர்கள் அதை விரும்பாவிடினும் அது நமது கடமை என்றும், அவர்கள் செய்துவரும் தொண்டுகளுக்கு அது ஒருபோதும் ஈடாகாதென்றும், எண்ணற்ற தமிழ்க்கழகங்களும், எங்கும் தமிழ் முழக்கங்களும் காணப்படும் இக்நாட்களில் இது ஒரு பெரிய செயல் அன்று எனவும் உணர்ச்சிமிகக் கூறினர்கள். அதை ஆதரித்து, திரு. N. V. நடராசன், பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், முதலியோர் பேசினர்கள். மாணவர் மன்றத்துக்கு ஒரு கட்டடம் அமைய வேண்டிய கட்டாயம் பற்றியும், அதற்காக அல்லும் பகலும் அயராது எளிய உணவும், உடையும் கொண்டு தம் ஏழ்மை நிலையிலும் தொண்டாற்றிக் கொண்டு மன்றம் வேறு தாம் வேறு என்று கருத முடியாதபடி வாழும் தியாக சீலர் சிவமுத்து அவர்கட்குப் பண முடிப்புக் கொடுக்க வேண்டியது கட்டாயம் என்றும், வேற்று நாடாக இருந்தால் இத்தகைய தொண்டர்க்கு எவ்வளவோ வசதிகள் செய்து கொடுத்திருப்பார்கள் என்றும் டாக்டர் தருமாம்பாள் அவர்கள் கூறினர்கள்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
சென்னை

## சில பாராட்டுரைகள்

**திரு. பூ. ஆலால சுந்தரனார் M.A.,**

தமிழ் மலையாகிய மறைமலை (அடிகள்) இடத்தில் தோன்றிய மணி, பணி திருநாவுக்கரசர்—அம்பணியில் தோன்றிய முத்து நம் புலவர் மயிலை சிவமுத்து. அவர் மாணவன் நான்—மாணவர்க்கு நண்பர் அவர்—வீர உணர்ச்சி உடையவர்—ஊக்கமும், வீரமும் நல்கும் பல அரிய பாடபுத்தகங்களை எழுதியிருக்கிறார்—அவைகளை மன்றத்தார் அச்சிட்டுப் பரப்புதல் வேண்டும்—பதவி, புகழ், பகட்டு, இல்லாமல் அவர் செய்து வரும் தொண்டு அளவற்றது—தமிழாசிரியர்கள் அவர் தொண்டால் ஓரளவு தம் நிலையில் உயர்த்தப்பட்டனர்—தக்க ஊக்கமும் ஒற்றுமையும் காட்டில் மேலும் உயர்வர். அவர் தம் அருங் குணங்களையும், ஆர்வங்களையும்' பேருழைப்பினையும் காண்பார் எவரும் அவரைப் போற்றுவர்—ஊக்கங்கள் கொள்வர்—உழைக்க முந்துவர்—எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம்—நேரமில்லை......

**திரு. பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்:**

அந் நாளில் சிறையிருந்த செல்வி பற்றி ஒரு காவியம் கூறுகிறது. இந் நாளில் சிறையிருந்த செல்வி தருமாம்பாள்—தம் தாய்மொழிக்காக—உலக மொழியாகத் தக்க தமிழ் மொழிக்காகவே சிறையிருந்தார் இவர்—தமிழ்த்தாய்க் குரிய வீரம் இவரிடம் இருக்கிறது—பணம் பதவி—உதவி இருக்கிறபோது தொண்டு செய்யலாம்—இருக்கிறவர்களில் பலர் செய்வதே இல்லை—சிவமுத்து அவர்கள் வறுமையில் செம்மை பூண்டு தொண்டு செய்கிறார்கள்—அவர் தம்மை மறந்து தம் குடும்பத்தை மறந்து தொண்டாற்றுகிறார்; அவர் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பு; எனவே எவரும் பேச்சளவில் நிற்காமல் சொன்னபடி பண முடிப்புத்தர முயல வேண்டும்—தமிழர் அனைவரும் முன்வர வேண்டும்.

**புலவர். அன்புகணபதி:**

புலவர் சிவமுத்தை வாழ்த்துவது எப்போன்ற இளைஞரை வாழ்த்துவது; தமிழை வாழ்த்துவதாகும். இந்தக் கூட்டத்திலும் அவர் (மணிவிழாத் தலைவர் ஆதலின் அமைதியாக இருக்க வேண்டும்) மன்றத்தார்க்காக அலைந்து அலைந்து வேலை செய்கிறார். இளைஞர்களும் அவரோடு போட்டி போட முடியாது—எப்போதும் தொண்டே குறி—அவரை நினைத்தால் என் போன்ற பலர்க்கு 1938-ஆம் ஆண்டு நிகழ்ச்சி, உலக வரலாறே கண்டறியாத எழுச்சி மனக்கண் முன் நிற்கிறது—அன்னை தருமாம்பாள் அவர்களால் மலர்ந்தது என் வாழ்வு; அப்படியே பலர் வாழ்வு; அவரால் நலம் பெற்றோர் பலர்; உணர்ச்சி பெற்றோர் பலர்; இன்று நம் நாட்டுக்குப் பல முத்துக்கள், பல தருமாம்பாள்கள் வேண்டும்.

**ம. இராசமாணிக்கம் B.O.L.,**

தக்கோர்களுக்கு மணிவிழா அயரும் மன்றத்தார்க்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்—தமிழாசிரியர்கள் நிலையை அறிந்து உயர்த்தாத அரசாங்கத்தை எதிர்த்தார் சிவமுத்து—அரசாங்கத்திற்கு அறிவு வரவில்லை—'துக்கவாரம்' கொண்டாடும்படி சொன்னார்—கொண்டாடினோம்....ஓரளவு தமிழாசிரியர் நிலை உயர்ந்தது, தமிழாசிரியர்கள் அவர் தலைமையில் ஒத்துழைத்தால் மேலும் நலம் பெறுவர்.

**வித். குஞ்சிதபாதம்:**

“மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்” என்ற ஞானசம்பந்தர் வாக்கினால் நான் புலவரை வாழ்த்துகின்றேன். புலவர்களை ஆதரிக்க வேண்டியது நாட்டின் கடமை. திரு. மோகனசுந்தரம் கேட்டுக்கொண்டதை உடனே நிறைவேற்ற வேண்டும்-இயன்றதை அவரவர்களும் இப்போதே தரவேண்டும்; நாள் கடத்தக் கூடாது. இதோ என்னுடைய சிறு காணிக்கை (ஏதோ தொகை கொடுத்தார்) மலர் மாலைகள் நிரம்ப அணிந்தார்கள். அவற்றை எல்லாம் பணமாகத் தந்தால் கூட நன்றாயிருந்திருக்கும்; அன்புக்கு அடையாளமே ஆனாலும், முதற் கடமை, தொண்டே வாழ்க்கையாக உள்ள அவருக்குப் பண முடிப்பு தரவேண்டியது—பின்னால் மாலை, வாழ்த்து முதலியன வழங்கலாம்.

**திரு. மா. இளஞ்செழியன்:**

இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டி மொழிப்போரை—டைனமோ இருக்கிற இடம் தெரியாமல் இருந்துகொண்டு எண்ணற்ற மின்சார விளக்குகளையும், விசிறிகளையும் மற்றும் பல தொழிற்சாலைப் பொறிகளையும் இயக்குவது போல—அசையாத மலையை அசைத்து, (மறைமலை அடிகள் தலைமையில்) திருவல்லிக் கேணிக் கடற்கரையில் இருத்தி நடத்திய ஒருவர்க்கு மணிவிழா இப்படியா நடப்பது—வேறு நாடுகளிலானால் இப்படி நடவாது-நாம் உண்மைத் தொண்டர்களை, (தியாகிகளை) புலவர்களை அறிந்து மதித்துக் கொள்ளவில்லை என்றே தெரி

கிறது; பணமுடிப்புக் கொடுக்கும் விழாவையேனும் கடற்கரையில் கூட்டுவோமாக.

திரு. தனகோடி:

"ஒரு சமயம் திரு. இலட்சுமணசாமி முதலியார் வேலை நிறுத்தம் செய்யக் கூடாதவேலை இரண்டு; ஒன்று மருத்துவவேலை இன்னொன்று ஆசிரியர்வேலை; இவ்விரண்டும் மக்கள் உடல், உயிர் நோய்களைப் போக்குவது; ஆகவே மிகவும் இன்றியமையாதன" என்றார். அத்தகைய இரு தொழில்களிலும் வல்லவர்க்கு மணிவிழா நடைபெறுகிறது—புலவர் அவர்கள் நன்றாகப் படிக்கிற பிள்ளைகளைவிட்டுப் படிக்காத பிள்ளைகளையே கேள்வி கேட்பார்; ஊக்கமூட்டுவார்; ஆசிரியன் துணை அவர்களுக்கே வேண்டுமென்பார். நானறிந்தவரை ஔவைக்கும் அதிவீராமனுக்கும் பிறகு சிறுவர்களுக்கு (அவர்கள் பாடலிலே நூல் செய்தனர்) எளிய நடையில் அரிய கருத்துக்களைப் பாட்டிலும் உரையிலும் நூல் எழுதி வெளியிட்டவர் புலவரவர்களே.

வரலாறு வெளியீடு:

அடுத்து, மாணவர் மன்றத்தின் சார்பில் திரு. வல்லை பாலசுப்பிரமணியம் அவர்கள் மணிவிழாத் தலைவர்களின் சுருக்கமான வரலாறுகள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டுப் பேசுமுகத்தான், திரு. தருமாம்பாள் அவர்களும் புலவர் சிவமுத்து அவர்களும் முறையே மாணவர் மன்றத்தின் தலைவராகவும், போட்டிக்குழுத் தலைவராகவும் இருந்து தொண்டாற்றி வரும் சிறப்பையும், "கங்குல் எல்லை காண்பளவும் நின்றான், இமைப்பிலன் நயனம்" என்றபடி மன்ற வளர்ச்சிக்காகப் புலவர் அவர்கள் இராப்பகலாக ஊணும் உறக்கமும்கூடச் சரியாகக் கொள்ளாமல் உழைக்குந் திறத்தையும் எடுத்துக் காட்டினார்.

## நன்றியுரை

டாக்டர் தருமாம்பாள்:

தம் நன்றியுரையின் போது அம்மையார், "நல்லாரைக் காண்பதும் நன்றே" என்ற பாடலின்படி தமிழே உருவான தலைவர் திரு. வி. கவையும், சிவமுத்து அவர்களையும் போன்ற நல்லோரைக் கண்டும், கேட்டும் அவர்களோடு பழகியுமே நான் சிறப்புற்றேன். மன்றம் வேறு சிவமுத்து வேறல்ல—அவர் செய்த, செய்யும் தொண்டுகட்கு அளவில்லை. அவர் நடத்திய தமிழ்த் திருமணங்கள், கூட்டிய கூட்டங்களுக்குக் கணக்கு உண்டா? அவருக்கு நாம் என்னவேண்டுமானாலும் செய்யலாம். எவ்வளவு செய்தாலும் அவருக்கு அது ஈடாகாது. என்னிடம் பணமில்லை; இருந்தால் பொன்னபிஷேகம் செய்வேன்—அவர் எப்படித்தான் இந்த முதிர்ந்த வயதிலும் ஓமப்பொடியும் தண்ணீருமே (புலவர் சிலகாலமாக அரிசி கோதுமை உணவே கொள்வதில்லையாம்) உணவாகக் கொண்டு இப்படி ஓயாமல் அலைந்து தொண்டு செய்கிறாரோ தெரியவில்லை—ஆங்காங்கே உள்ள தமிழ்ச் சங்கங்களும் மன்றத்தைச் சார்ந்த பல மாவட்டத்து மாணவர்களும் முயன்றால் அவருக்குப் பத்தாயிரம், ஏன்? மேலும் எளிதாகத் தரலாம். தரவேண்டும். மன்றத்துக்கெனக் கட்டடம் ஒன்றும் கட்டவேண்டும். அதற்கும் தமிழர்கள் பலரும் உதவ வேண்டும் என்றார்கள்.

புலவர் சிவமுத்து:

காலையிலிருந்து நீங்கள் எல்லோரும் பொழிந்த அன்புக்குச் சுருங்கிய நோக்கில் எப்படி நன்றி கூறுவேன் என்று தொடங்கித் தலைவர் முதல் அனைவருக்கும் தனித்தனியே தமக்கே உரிய, உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிக் குரலில் நன்றி கூறி, சாதாரண நிலையில் தொண்டாற்றி வந்த எனக்கு இம் மணிவிழா மேலும் பொறுப்புகளையே சுமத்தி விட்டது. 60 ஆண்டு முதிர்ந்து விட்டதால் தளர்ந்து விடுவேன் என்று எண்ணிச் சலிப்பேற்படாதபடி ஊக்கமூட்டவே இவ்விழாவை அன்பர்கள் செய்தனர் போலும். இயன்ற தொண்டுகளைச் செய்ய வேண்டுவது எல்லார்க்கும் கடமை. எனது ஆசிரியர் மணியரசர் செய்த தொண்டுகளை, செய்ய எண்ணிய தொண்டுகளைத் திடுமென அவர் மறைந்து விட்ட காரணத்தால் தொடர்ந்து செய்ய வேண்டுவது என் நீங்காக்கடமை அல்லவா? அதனால் செய்து வருகின்றேன். இனியும் உங்கள் நல் வாழ்த்தின் துணையால் தொடர்ந்து செய்து வருவேன் என்றார்.

—ஆடலரசு.

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)